# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
## தொலைநிலைக்கல்வித் தேர்வுகள்

---

முனைவர் தி. சிவகுமார்
கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்(பொ). நாள்: 29.09.2020

### இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இளங்கல்வியியல் மே 2020 தேர்வுகள், அறிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணையின்படி 05.10.2020 அன்று தொடங்கி 11.10.2020 வரை நடைபெறவுள்ளன.

1. இளங்கல்வியியல் எழுத்துத் தேர்வுகள் அனைத்தும் இணையவழி நடத்தப்பெறும். இரண்டாமாண்டு மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வுகள் 11.10.2020 அன்று அந்தந்த மையங்களில் நேரடியாக நடைபெறும்.
2. மே 2020 தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் மட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். விண்ணப்பித்தோர் பட்டியல் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்காதோர் எழுதிய விடைத்தாள்கள் மதிப்பீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நாளன்று முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வு நேரம் முற்பகல் காலை 10 மணி முதல் 1 மணி வரை. பிற்பகல் 2 மணி முதல் 5மணி வரை.
4. முற்பகல் தேர்வு எழுதுவோர் விடைத்தாள்களைப் பிற்பகல் 3.00 மணிக்குள் பதிவஞ்சல்/ விரைவுத் தபாலிலும், பிற்பகல் தேர்வு எழுதுவோர் பிற்பகல் 7.00க்குள் விரைவுத் தபால் / கூரியர் தபாலிலும் சேர்த்துவிட வேண்டும். தாங்கள் விடைத்தாள்கள் அனுப்பிய சான்றினை இறுதிநாளன்று தொலைநிலைக்கல்வி தேர்வுப் பிரிவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
5. மாற்றுத் திறனாளி (பார்வைக் குறைபாடுடைய) மாணவர்களுக்குத் தேர்வு நேரத்தில் கூடுதலாக 1 மணி நேரம் அனுமதிக்கப்படுகிறது.
6. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நேரில் சேர்க்க விரும்பினால் முதலாமாண்டு எழுதுவோர் பிற்பகல் 2 மணிக்குள்ளும், இரண்டாமாண்டு எழுதுவோர் பிற்பகல் 6 மணிக்குள்ளும் தொலைநிலைக்கல்வித் தேர்வுப் பிரிவில் சேர்க்கலாம்.

7. ஏ4 அளவுள்ள கோடிடப்படாத தரமான வெள்ளைத் தாள்களைப் பயன்படுத்த வேண்டும். இரண்டு பக்கங்களிலும் எழுதலாம். விடைத்தாள்களைப் பக்க எண்களிட்டு பக்க வாரியாக அடுக்கி மடிக்காமல் ஏ4 அளவுள்ள தரமான உறையில் வைத்து அனுப்ப வேண்டும்.
8. அனுப்புநர் முகவரியில் தங்களின் பெயர், முகவரி மற்றும் பதிவெண் ஆகியவற்றை எழுதி, **கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ), தொலைநிலைக் கல்வி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
9. விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழ் பகுதியில் மாணவர்கள் தங்கள் சேர்க்கை எண்ணை எழுதிக் கையொப்பம் இடவேண்டும்.
10. விடைத்தாளின் முகப்பு பகுதியைப் பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து முதல்நாளே பதிவிறக்கம் செய்து கொண்டு, தேவைக்கேற்ப நகலெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாள் எழுதும்போதும் முழுமையாகப் பூர்த்தி செய்து ஒவ்வொரு விடைத்தாளின் முகப்புப் பக்கமாக இணைக்க வேண்டும்.
11. ஒவ்வொரு தேர்வினையும் 40 பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.
12. விடைத்தாளின் எந்த ஒரு பக்கத்திலும் பெயர் மற்றும் சிறப்புக் குறியீடுகளை எழுதக் கூடாது.
13. தேர்வு தொடர்பான ஐயங்களுக்கு 04362-227845, 8220130273 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.
14. எத்தகைய முறைகேடுகளிலும் மாணவர்கள் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். முறைகேட்டில் ஈடுபட்டதாகத் தெரிய வந்தால் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.

29/09/2020

கூடுதல் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்(பொ).